**Starting time 3.30 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 85/2006**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 13.07.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பாப்பாத்தி (எ) கலா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை தெரியும் என்றால், ஆமாம். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் அது தயார் செய்யப்பட்டு என்றால், ஆமாம். 12.03.1986 தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தின் மூலம் தான் தாவா சொத்து கிரயம் பெறப்பட்டது என்றால், ஆமாம். அந்த சொத்தின் பழைய புல எண் 413/15 என்றால், ஆமாம். 13.12.1991-ல் வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சொத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சொத்திற்கு கிழக்கில் கருப்பாயி என்பவரின் சொத்து உள்ளது என்றால், ஆமாம்.

2. வா.சா.ஆ.1-ல் கிரயம் வாங்கிய சொத்திற்கு கிழக்கில் தென்வடலாக ஒரு பாதை செல்கிறது என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் உள்ள சொத்திற்கு தென்புறத்தில் கிழமேலாக ஒரு பாதை செல்கிறது என்றால், ஆமாம். பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கில் தென்வடலாக ஒரு வீதி செல்கிறது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 மற்றும் 2 -ல் கிரயம்

பெற்ற சொத்துகளுக்கு இடையில் சந்து செல்கிறது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் சொத்து 3 இன சொத்துக்களாக வாங்கப்பட்டது என்றால், ஆமாம். அந்த 3 இன சொத்துக்களும் கிழமேலாக அமைந்துள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ-2-ல் வாங்கப்பட்ட சொத்துக்கள் 2 இன சொத்துக்களாக அய்யம்மாள் மற்றும் அவரது மகன்கள் ராமநாதன் மற்றும் பூபலானிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் முதல் இன சொத்து 135-1/4 சதுரடி அளவு கொண்டது என்றால், ஆமாம். அதில் 2 வது இன சொத்து 195-1/2 சதுரடி என்றால், ஆமாம்.

3. வா.சா.ஆ.1-ல் மொத்தம் 1254 சதுரடி அளவு நிலம் கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, 1252 சதுரடி. வா.சா.ஆ.2-ல் வீட்டிற்கு வடபுறத்தில் உள்ள உறைக்கிணற்றில் மாமூலாக தண்ணீர் எடுத்துக்கொள்ளும் பாத்தியம் உட்படவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அதில் உள்ள 2 இன சொத்துக்களுக்கும் தனித்தனியாக தண்ணீர் எடுத்துக் கொள்ளும் பாத்தியம் வழங்கப்பட்டுள்ளது என்றால், ஆமாம். கருப்பாயிக்கு அந்த கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் பாத்தியம் உள்ளது என்றால், அதை பற்றி எனக்குத் தெரியாது.

4. தாவா சொத்திற்கு வடபுறடத்தில் கிழமேலாக பிரதிவாதியின் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே 20 அடி அகலத்தில் காலி இடம் உள்ளது என்றால், சரியல்ல. எனது வீட்டிற்கும் 2-ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே 8 அடி அகலத்தில் இடம் இருக்கிறது என்றால், இல்லை. என்னுடைய வீட்டிலிருந்து 2-ம் பிரதிவாதியின் வீடு 3 அடி உயரத்தில் உள்ளது என்றால், ஆமாம், இப்போது தான் அவ்வாறு கட்டியுள்ளார்கள். வா.சா.ஆ.1, 2-ல் கிரயம் பெற்ற சொத்துக்களைத்தான் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றால், ஆமாம். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 1252 சதுரடி நிலம் தான் தாவா சொத்து என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் உள்ள சொத்தை வா.சா.ஆ-3 மற்றும் 4-ன் மூலம் பாத்தியப்பட்ட நல்லமுத்து படையாச்சியின் வாரிசுகளிடமிருந்துதான் நான் கிரயம் பெற்றேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.2-ல் கிரயம்

பெற்ற சொத்தும் ஆரம்பத்தில் நல்லமுத்து படையாச்சிக்கு உரிமையானதுதான் என்றால், ஆமாம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 3.58 P.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.